தினமலர்
சென்னை
● செவ்வாய் ● செப்டம்பர் 21 2021




■ ஸ்ரீராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவனர் பிறந்த நாள் விழா மற்றும் பல்கலை தின விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதில், நிறுவனத்தின் வேந்தர் வெங்கடாசலம், சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உடன், பதிவாளர் சுவாமிநாதன், இணை வேந்தர் செங்குட்டுவன் மற்றும் துணை வேந்தர் விஜயராகவன் உள்ளிட்டோர். இடம்: போரூர், சென்னை.

# ஸ்ரீராமச்சந்திரா பல்கலையில் நிறுவனர் நாள் விழா

**சென்னை, செப். 21–**

சென்னை, போரூரில் உள்ள ஸ்ரீராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில், நேற்று, அதன் நிறுவனர் நாள் விழா நடந்தது.

சென்னை, ஸ்ரீராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந்தர் ராமசாமி உடையாரின் கல்விப்பணிகளை நினைவு கூறும் வகையிலும், சிறந்த கல்வியாளர்கள், மாணவர்களை கவுரவிக்கும் வகையிலும் நிறுவன நாள், பல்கலை நாள் விழா, நேற்று நடந்தது.

இதில், எம்.பி.பி.எஸ்., தேர்வில் சிறப்பாக தேறிய, அரவிந்த் ராதாகிருஷ்ணன், பால லட்சுமி, ராம்பிரசாத் ஆகியோர் தலா மூன்று தங்கப்பதக்கங்கள், ஸ்ரீவித்யா ரவிசங்கர், ஆதித்யா ஆகியோர் தலா இரண்டு தங்கப் பதக்கங்களையும் பெற்றனர். மேலும், 40 பேருக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன.

அதேபோல், பேராசிரியர்களான கல்வித் துறை ஆலோசகர் சோமசுந்தரம், மருத்துவக் கல்லூரி முதல்வர் அனந்தன், பதிவாளர் சுவாமிநாதன், இதயநலத்துறை தலைவர் முரளிதரன் ஆகியோர் சிறப்பு விருதுகளை பெற்றனர்.

விருதுகளை, வேந்தர் வெங்கடாசலம், இணைவேந்தர் செங்குட்டுவன் ஆகியோர் வழங்கினர். துணை வேந்தர் விஜயராகவன், கல்லூரியின் தரம் குறித்து பேசினார்.

நிகழ்ச்சியில், கல்வியாளர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.